# கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : மரு. வி. ஜெயசந்திர பானுரெட்டி., இ.ஆ.ப.,

ந.க.எண்:33900/2017/கே2, நாள்: 21 .03.2022.

பொருள் : பணியமைப்பு - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - கிருஷ்ணகிரி மாவட்டம் - இளநிலை உதவியாளர் - ஹரிஹரன் (திரு) எஸ் - 04.02.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :
1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண்.33900/2017/கே2, நாள்:04.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்:26.02.2020.
3. அரசு இணைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ3)துறை, சென்னை கடித எண்.6895/இ3/ 2021-5, நாள்:14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்

----000----

ஆணை :-

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், தேன்கனிக்கோட்டை உபகோட்ட அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து கடந்த 26.12.2014 அன்று பணியிடைக்காலமான (லேட்) சீனிவாசன் என்பவரின் வாரிசுதாரர் திரு.எஸ்.ஹரிஹரன் என்பவருக்கு பார்வை (1)-இன்படி கருணை அடிப்படையில் தனி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணியிடம் வழங்கப்பட்டு 04.02.2019 முற்பகல் பணியில் சேர்ந்து, தற்போது கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (2)-இல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு தேவையில்லாத இனங்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) **(Appointing Authority)** என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரான மாவட்ட ஆட்சித்தலைவர் நிலையில் **(One level higher than the appointing authority)** பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, திரு.எஸ்.ஹரிஹரன், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 04.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

(...2..)

மேற்படி விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கிருஷ்ணகிரி.

பெறுநர்

திரு. எஸ். ஹரிஹரன்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
கெலமங்கலம்.
(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), கெலமங்கலம் மூலமாக)

நகல் : கே2 இருப்பு கோப்பிற்கு